# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy.** LIC | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


DATE : 28·04·2026

# ஈரோடு மாவட்ட
# அமெச்சூர் கபாடி
# அசோசியேஷன்



## ஈரோடு மாவட்ட
## கபாடி நடுவர்களுக்கு
### விதித்துள்ள விதிமுறைகள்

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


1 ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து நடுவர்களும் EDAKA ஆல் நியமிக்கப்பட்டு உள்ள நடுவர் குழு கன்வீனர் இணை கன்வீனர் ஆகியோரின் தலைமையில் பணி புரிய வேண்டும்.

2 போட்டிக்கு வரும்போது நடுவர்கள் அனைவரும் ஒரே சீருடையில் ஷு அணிந்து வரவேண்டும்.

3 நடுவர்கள் அனைவரும் போட்டி துவங்கும் நாள் இரவு 9.00 மணிக்குள் மைதானத்திற்கு வந்துவிட வேண்டும். நடுவர்குழு கன்வீனர் மற்றும் இணை கன்வீனரிடம் அனுமதி பெற்ற நடுவர்கள் மட்டும் காலை 8.00 மணிக்கு முன்னதாக கண்டிப்பாக விளையாட்டு மைதானத்திற்கு வந்துவிட வேண்டும்.

4 ஒவ்வொரு போட்டிக்கும் மறுநாள் காலை 8.00 மணிக்கு மேல் மைதானத்திற்கு வருகை தரும் நடுவர்கள் விழாக்குழுவிடம் காலை உணவிற்கு பணம் கேட்க கூடாது.

5 ஒவ்வொரு போட்டிக்கும் நடுவர் பணி வழங்குவது ஈரோடு மாவட்ட கபடி கழக தலைவர் ஒப்புதலுடன் நடுவர் குழு கன்வீனர் தெரிவிப்பார். அதன் விபரம் நடுவர் குழு இணை கன்வீனர்க்கும் தெரிவிக்கப்படும்.

6 நடுவர் பணி குறித்த அறிவிப்பு வலைதளத்தில் வந்தவுடன் அன்றைய போட்டிக்கு வர இயலாத நடுவர்கள் காலதாமதம் செய்யாமல் கன்வீனரிடம் உடனடியாக தகவல் தெரிவித்துவிட வேண்டும்.

7 ஈரோடு மாவட்ட அமைப்பில் EDAKA-ல் பதிவு செய்துள்ள அனைத்து நடுவர்களும் தங்களுக்கு நடுவர் பணி வாய்ப்பு வழங்கும்போது மறுப்பு ஏதும் சொல்லாமல் நடுவர் பணி செய்ய வேண்டும்.

8 ஈரோடு மாவட்ட அமைப்பில் EDAKA-ல் பதிவு செய்துள்ள கல்லூரியில் மற்றும் பள்ளியில் பணிபுரியும் நமது கபடி நடுவர்களுக்கு மாவட்டத்தில் பள்ளி கல்லூரியில் நடைபெறும் கபடி போட்டிகளில் நடுவர் பணிபுரிய அதிக வாய்ப்பு வழங்கப்படும்.

9 நடுவர்கள் பணிக்கு புறப்பட்டு மைதானத்திற்கு வந்து போட்டி முடிந்து வீடு திரும்பும் வரை மது அருந்துதல் உள்ளிட்ட போதை வஸ்துகளை உபயோகிக்க கூடாது.

10 நடுவர்கள் போட்டி நடைபெறும் பொழுது மாவட்ட அமைப்பில் EDAKA ஆல் நியமிக்கப்படும் இன்சார்ஜ் (Incharge) நடுவரின் அறிவுரைப்படி செயல்பட வேண்டும்.

11 ஒவ்வொரு போட்டிக்கும் மாவட்ட அமைப்பின் **EDAKA** ன் தலைவர் பரிந்துரையின் படி கன்வீனர் அவர்கள் **Incharge** மற்றும் நடுவர்களை நியமிப்பார்.

12 ஒவ்வொரு போட்டிக்கும் **EDAKA** இன் பொறுப்பாளர்கள் நிர்வாக குழு உறுப்பினர்கள் அல்லது **Development Comittee** அல்லது **Selection Comittee** உறுப்பினர்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்கு அனைத்து நடுவர்களும் ஒத்துழைப்பு வழங்கி செயல்பட வேண்டும்.

13 ஒவ்வொரு போட்டிக்கும் மாவட்ட அமைப்பின் **EDAKA** அறிவித்துள்ளதன்படி நடுவர் பணி தொகை பெறப்பட வேண்டும்

| | | |
|---|---|---|
| போட்டி முடியும் நாள் இரவு | 12.00 மணி வரை | ரூ. 2,000 /- |
| போட்டி முடியும் நாள் அதிகாலை | 01.00 மணி வரை | ரூ. 2,100 /- |
| போட்டி முடியும் நாள் அதிகாலை | 02.00 மணி வரை | ரூ. 2,200 /- |
| போட்டி முடியும் நாள் அதிகாலை | 03.00 மணி வரை | ரூ. 2,300 /- |

அதிகாலை 3.00 மணிக்கு மேல் காலை 9.00 மணி வரை நடைபெற்றால் ரூ. 2,500 /- என்று நடுவர் பணி ஊதியம் பெறப்பட வேண்டும்.

14 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் போட்டி நடத்தும் விழாக்கமிட்டி நிர்வாகிகளிடம் தனி தனியே பெட்ரோல் மற்றும் சாப்பாடு உள்ளிட்ட இதர செலவுகளுக்க என சொல்லி பணம் வாங்குதல் கூடாது.

15 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் அனைவரும் விழாகமிட்டி மற்றும் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அனைவரிடமும் அன்போடும் அரவணைப்போடும், பாசத்தோடும், அதிகார தோரணையின்றி பழக வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

16 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் **EDAKA** நிர்வாகிகளின் முழு விபரம் அறிந்து அவர்கள் போட்டிக்கு வருகை தரும் போது மைக்கில் வரவேற்று அமர வைக்க வேண்டும்.

17 போட்டியில் பணிபுரியும் போது நடுவர்கள் விளையாடும் அணி வீரர்களை ஒருமையில் திட்டுவதும், மிரட்டுவதும், பழிவாங்கும் நோக்கில் பேசுவதையும் தவிர்த்து அன்புடன் அரவணைத்து செல்ல வேண்டும்.

18 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் தாங்களுடன் பணிபுரிய வந்த நடுவர்களுடன் எந்த வித பாரபட்சமும் பார்க்காமல் ஒற்றுமையுடனும் அன்புடனும் பழகி நட்புறவை காக்க வேண்டும்.

19 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் நாங்கள் விழாகமிட்டிக்கு வேண்டியவர்கள் என்று கூறி பணிவாய்ப்பு கேட்க கூடாது. போட்டி நடத்தும் விழாகமிட்டியிடம் எனக்கு வாய்ப்பு கேட்டு வாங்குங்கள் என்று வற்புறுத்தவும் கூடாது.

20 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் தங்களின் சக நடுவர்க்கு வாய்ப்பு கேட்டு கன்வீனரையோ, EDAKA தலைவரையோ, இணை கன்வீனரையோ தொந்தரவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

21 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் போட்டியின் போது அனுபவம் நிறைந்த சீனியர் நடுவரை Chief ஆக நியமிக்க வேண்டும். Incharge அதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

22 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் அவர்கள் பகுதி சார்ந்த அணிகள் விளையாடும் போது நடுநிலையோடுதான் நடுவர் பணி புரிய வேண்டும் ஒரு தலை பட்சமாக செயல்படுவது கண்டிக்கத்தக்கது.
அதை தவிர்க்க வேண்டும்.

23 போட்டியின் போது நடுவர் பணிபுரியும் நடுவர்கள் தங்களுக்கு வேண்டியப்பட்ட அணியை வெற்றி பெற வைக்க நினைப்பது தவறான செயல் என்பதை உணர்ந்து நடுநிலை தவறாமல் நடந்து கொள்ள வேண்டும்.

24 போட்டியின் பணிபுரியும் நடுவர்கள் பொறுமையாக, நிதானமாக கூர்ந்து கவனித்து நடுவர் பணி புரிந்து பிரச்சனைகள் வராத வண்ணம் நடுவர் பணி ஆற்றவேண்டும்.

25 போட்டியின் போது பணிபுரியும் நடுவர்கள் பங்கு பெற்று விளையாடும் அணிகளின் பயிற்சியாளர்கள் மீது வாக்குவாதத்தில் ஈடுபடுவது, அதிகாரத்தோடு பேசுவது போன்ற செயல்களை தவிர்த்து அவர்களிடம் அன்போடு பேசி பிரச்சனைகளை கவனமாக பேசி தீர்க்க வேண்டும்.

26 போட்டியின் போது பணிபுரியும் சீனியர் நடுவர்கள் ஜூனியர் நடுவர்களுக்கு காலம், நேரம், ஒழுக்கம் மற்றும் நடுவர் பணியில் கவனம் குறித்த அறிவுரைகள் வழங்கி வழி நடத்த வேண்டும்.

27 போட்டியில் பணிபுரியும் நடுவர்களில் சீனியர் நடுவர்கள் தங்களுடன் ஒரு ஜூனியர் நடுவரை இணை சேர்த்து பணிபுரிய வேண்டும். ஜூனியர் நடுவர்களுக்கு நடுவர் பயிற்சி தரம் அதிகப்படுத்த சீனியர் நடுவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam | Joint Secretary | Erode | Erode |
| | 97892 23379 | Chennimalai | 98427 53547 | **K.Velliangiri** |
| | yazhinirajkumar2000@gmail.com | 99415 21256 | | Chennimalai |


28 நடுவர் பணிபுரியும் நடுவர்கள் போட்டி பொறாமை தவிர்த்து ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். குடி போதையில் இரவு நேரத்தில் நடுவர் குழு கன்வீனர், இணை கன்வீனர், EDAKA நிர்வாகிகளுக்கு போன் செய்து தொந்தரவு செய்வது மிகவும் தவறான செயலாகும். அப்படி செய்தால் EDAKA முன்அறிவிப்பின்றி அந்த நடுவரை டிஸ்மிஸ் செய்யும்.

29 நடுவர் பணிபுரியும் நடுவர்கள் ஒவ்வொரு போட்டியிலும் போட்டியினை சிறப்பாக நடத்தி கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
இரவு 11.00 மணிக்குள் கண்டிப்பாக போட்டியை முடித்திட வேண்டும். மழை உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணங்களால் போட்டி கால தாமதம் ஏற்பட்டால் விழா கமிட்டி மற்றும் EDAKA நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டும்.

30 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் EDAKA நிர்வாகிகள் மீதும் நடுவர்கள் குழு கன்வினர் மற்றும் இணை கன்வினர் மீதும் அவதூறு பரப்பினாலும் வலைதளத்தில் தவறாக பேசினாலும் அந்த குறிப்பிட்ட நடுவர் மீது 6-மாத காலத்திற்கு பணி செய்ய தடை உத்தரவு (Susband) பிறப்பிக்கப்படும்.

31 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் எடைபிரிவு போட்டிகளில் தன்னிச்சையாக முடிவெடுப்பதை தவிர்த்து EDAKA விதிமுறைகளின் படி போட்டியினை சிறப்பாக நடத்திட வேண்டும். எடைபிரிவு போட்டிகளில் ஜூனியர் நடுவர் கமிட்டி மற்றும் இரண்டு அணிகளின் வீரர்கள் முன்னிலையில் எடை சரி பார்த்து சீல் குத்த வேண்டும்.

32 எடைப்பிரிவு போட்டிகளில் EDAKA அறிவித்துள்ள விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் மீறி தன்னிச்சையாக முடிவு எடுக்கும் நடுவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

33 ஜூனியர் நடுவர்கள் ஒவ்வொரு போட்டியிலும் போட்டி துவங்கும் நாள் இரவு 9.00 மணிக்கு முன்னதாக மைதானத்திற்கு வந்து அணிகளின் குழு புகைப்படம் எடுக்க வேண்டும்.

34 ஜூனியர் நடுவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட அதிகமாக கேட்டு பெறக்கூடாது.

35 ஜூனியர் நடுவர்கள் சீனியர் நடுவர்களை போல நடுவர் பணி செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். தங்களின் நடுவர் பணி திறமையை அதிக அளவில் வளர்த்து கொள்ள வேண்டும்.

36 போட்டியில் பணிபுரியும் அனைத்து சீனியர் ஜூனியர் நடுவர்கள் அனைவரும் போட்டி மறுநாள் இரவு 11.00 மணிக்குள் இறுதி போட்டி நடைபெற ஏதுவாக போட்டியினை வழி நடத்த வேண்டும். அதில் தவறு நடந்தால் EDAKA கூர்ந்து கவனிக்கும்.

37 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் மறுநாள் இரவு 12.00 மணிக்கு மேல் போட்டியினை நகர்த்துவதற்க்கு திட்டமிடல் கூடாது. விழாக்குழு, பார்வையாளர்கள், வீரர்கள், பயிற்சியாளர்கள், நன்கொடையாளர்கள் ஊர் பொதுமக்கள் அனைவரின் நலன் கருதி கண்டிப்பாக போட்டியினை இரவு 11.00 மணிக்குள் முடித்திட வேண்டும்.

38 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் அனைவரும் **EDAKA** விதிமுறைகளையும், **TNAKA** விதிமுறைகளையும், **AKFI** விதிமுறைகளையும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.

39 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் **EDAKA** விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டால் நடுவர் பணி வாய்ப்பு வழங்குவது முன் அறிவிப்பு இன்றி நிறுத்தப்படும்.

40 எக்காரணம் கொண்டும் நடுவர் ஊதியம் கொடுத்தால் தான் கால் கட்ட போட்டிக்கு மேல் நாங்கள் பணி புரிவோம் என்று கமிட்டியிடம் வற்புறுத்தக் கூடாது. அப்படி கமிட்டியின் மீது சந்தேகம் அடைந்தால் **EDAKA** தலைமைக்கு தகவல் தர வேண்டும். **EDAKA** அதற்கு உடனடியாக தீர்வு தரும்.

41 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் சீனியர், ஜுனியர் யாராக இருந்தாலும் எந்த பணி செய்ய **Incharge** கூறினாலும் மறுப்பு சொல்லாமல் பணிபுரிய வேண்டும்.

42 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் முன் கால் கட்ட போட்டிக்கு தங்களுக்கு வேண்டிய அணிகளை குறுக்கு வழியில் கொண்டு வர முயற்சிக்க கூடாது. அப்படி செய்தால் **EDAKA** நடவடிக்கை எடுக்கும்.

43 போட்டியில் பணிபுரிய செல்லும் நடுவர்கள் விழா கமிட்டியோடு சேர்ந்து கொண்டு விதிமுறைகளுக்கு முரணாக செயல்படுவதும் விழா கமிட்டியை சேர்ந்த அணிகளை முன் கால் கட்ட போட்டிக்கு கொண்டு செல்ல திட்டமிட்டு தகுதி வாய்ந்த அணிகளை ஒன்றோடு ஒன்று முன் கூட்டியே மோத விட்டு தோற்கடிப்பதை தவிர்க்க வேண்டும். அத்தகைய சூழ்நிலை வந்தால் உடனடியாக **EDAKA** விடம் தெரிவிக்க வேண்டும்.

44 போட்டியில் பணிபுரிய செல்லும் நடுவர்களுக்கு தங்குமிடம் & உணவு வசதி விழா கமிட்டி செய்துதர வில்லை என்றால் உடனடியாக **EDAKA** தலைமைக்கு போன் மூலம் தெரிவிக்க வேண்டும்.

45 போட்டிகளுக்கு பணிபுரிய வரும் மாநில நடுவர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து கனிவுடன் நடத்த வேண்டும்.

46 போட்டியில் பணிபுரியும் நடுவர்கள் மீது புகார் கடிதங்கள் வரும் பட்சத்தில் **EDAKA** தலைமை சம்மந்தப்பட்ட நடுவர்களிடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பும் பட்சத்தில் புகாருக்கு உண்டான நடுவர் 7 நாட்களுக்கு பதில் விளக்கம் தர வேண்டும் அப்படி விளக்கம் தர தவறும் பட்சத்தில் **EDAKA** நடவடிக்கை எடுக்கும்.

47 போட்டியில் பணிபுரிய செல்லும் நடுவர்கள் விழா கமிட்டியிடம் அசைவ உணவு வேண்டும் என்று வற்புறுத்தி வாங்க கூடாது. விழா கமிட்டி விருப்பப்பட்டு அசைவ விருந்து தந்தால் அதற்கு ஆட்சேபனை இல்லை

48 போட்டியில் பணிபுரிய செல்லும் நடுவர்கள் மீது எந்த குறையும் புகாரும் வராத வண்ணம் **EDAKA** நடுவர்கள் பணிபுரிய வேண்டும்

49 போட்டியின் போது நடுவர்கள் கூர்ந்து கவனித்து விளையாடும் வீரர்கள் **EDAKA**விதிமுறைகளுக்கும், **AKFI** விதிமுறைகளுக்கும் முரணாக செயல்படும் போது **\Varning Card** போட வேண்டும்.

50 போட்டியின் போது நடுவர்கள் அதிக அளவில் **Official Time Out** கொடுப்பதை தவிர்க்க வேண்டும். **Official Time Out** காரணம் இன்றி கேட்க கூடாது என்று போட்டி துவங்கும் முன்பு நடுவர்கள் இரு அணி தலைவருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

51 போட்டியின் போது நடுவர்கள் இரவு 12.00 மணிக்குள் அணிகளின் குழு புகைப்படம் எடுத்த பின்னர் தான் பதிவு கட்டணம் பெற்று அணியின் பெயரை பதிவு செய்ய வேண்டும்.

52 போட்டியின் போது நடுவர்கள் அதிகாலை 2.00 மணிக்குள் வெளி மாவட்ட அணிகளின் குழு புகைப்படம் எடுத்த பின்னர் தான் அணியின் பெயரை பதிவு செய்ய வேண்டும்.

53 போட்டியின் போது கலந்து கொள்ளும் அணிகளின் பதிவு கட்டணத் தொகை தங்களுடைய **G-pay** எண்ணிற்கு அனுப்ப சொல்லி பெறக்கூடாது.

54 போட்டியின் போது இரவு 12.00 மணிக்கு முன்னதாக புகைப்படம் எடுக்காமல் அணிகளின் பெயரை பதிவு செய்து விளையாட அனுமதித்தால் அந்த போட்டியின் நடுவர் குழு **Incharge** உட்பட இரவு பணிபுரியும் அனைத்து நடுவர்கள் மீதும் **EDAKA** நடவடிக்கை எடுக்கும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy, LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam | Joint Secretary | Erode | Erode |
| | 97892 23379 | Chennimalai | 98427 53547 | **K.Velliangiri** |
| | yazhinirajkumar2000@gmail.com | 99415 21256 | | Chennimalai |


55 போட்டியின் போது ஈரோடு மாவட்ட அணிகளுடைய பதிவு விபரத்தை சரியாக இரவு 12.15 க்குள்ளும் வெளி மாவட்ட அணிகளின் பதிவு விபரத்தை அதிகாலை 02.15 மணிக்குள்ளும் வலை தளததில் பகிர வேண்டும்.

56 போட்டியின் போது பணிபுரியும் நடுவர்கள் கூட்டாக தேனீர் அருந்த சென்று விட்டோ அல்லது உணவு சாப்பிட சென்று விட்டோ கால தாமதமாக வருவதை தவிர்க்க வேண்டும்.

57 போட்டியின் போது அணிகள் மைதானத்தில் இறங்கும் போது நடுவர்கள் மைதானத்தில் நடுவர் பணிபுரிய தயார் நிலையில் இருக்க வேண்டும்.

---

**போட்டியில் பணிபுரியும் அனைத்து நடுவர்களும்**

**ஈரோடு மாவட்ட**

**அமெச்சூர் கபாடி அசோசியேஷனின் விதிமுறைகளையும்**

**கபாடி விளையாட்டின் வளர்ச்சியையும்**

**கபாடி வீரர்கள், வீராங்கனைகளின்**

**நலனையும் கருத்தில் கொண்டு கண்ணியத்துடனும்,**

**கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடனும், அன்புடனும்,**

**அர்ப்பணிப்பு உணர்வுடனும், நேர்மை, உண்மை, துணை கொண்டு**

**பாரபட்சம் பார்க்காமல் நடுநிலையோடு அறவழியில்**

**பயணிக்க வேண்டும்.**

**ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும்.**

---





**ஈரோடு மாவட்ட**

**அமெச்சூர் கபாடி அசோசியேஷன்**

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
| --- | --- | --- | --- | --- |
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |

## உறுதி மொழி கடிதம்

தேதி : ........................

திரு. :................................................ ஆகிய நான் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷனில் (EDAKA) என்னை இணைத்து கொண்டு .................................. நடுவராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் விதித்துள்ள விதிமுறைகளை நன்றாக படித்தும், புரிந்தும், கேட்டு தெரிந்தும், அறிந்தும் கொண்டேன்.

**EDAKA** தற்போது அறிவித்துள்ள விதிமுறைகள் அனைத்தும் ஈரோடு மாவட்டத்தில் கபாடி விளையாட்டின் வளர்ச்சிக்கும் வீரர், வீராங்கனைகள் நலனுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை கருத்தில் கொண்டு மேற்கண்ட **EDAKA** விதிமுறைகளை நான் மனதார வரவேற்கிறேன்.

மேலும் **EDAKA** அறிவித்துள்ள விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு விதிமுறைகளை பின்பற்றி நான் ஈரோடு மாவட்டத்தில் நேர்மையான நடுவராக பணிபுரிவேன் என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

மேலும் **EDAKA** விதிமுறைகளுக்கு முரணாகவோ **EDAKA** அமைப்பின் செயல்பாடுகளுக்கு எதிராகவோ நான் செயல்பட்டாலோ அல்லது எனது நடுவர் பணி மீது மிக பெரிய புகார் கடிதம் வந்து அந்த புகாரில் உள்ள சங்கதிகள் உண்மை என்று நிரூபிக்கப்பட்டாலோ என் மீது **EDAKA** எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்

இது யாருடைய தூண்டுதலும் இன்றி நான் மனப்பூர்வமாக சம்மதித்து எழுதி கொடுக்கும் உறுதி மொழி கடிதம் ஆகும்.

முகவரி : ....................................................

....................................................

....................................................

தொலைபேசி எண் : ....................................

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
| --- | --- | --- | --- | --- |
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


OFFICIAL RULES & REGULATIONS

தலைவர்

P. Rajkumar 28/04/2026

(பெ.ராஜகுமார்)

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.

செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்

P. RAJAKUMAR

PRESIDENT

Erode Dt. Amateur Kabaddi Association

ERODE - 638 452.